# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 6/2023 |
| Deposition of Witness for | : | P.W.2 |
| Name | : | **ராஜேஷ்** |
| Husband Name | : | **ராமு** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் 1 மற்றும் 3 வது எதிரிகள் ஆஜர். 2-ம் எதிரி இறப்பு)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 07.04.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது நாட்டார்மங்கலத்தில் வசித்து வருகிறேன். நான் படித்துமுடித்து விட்டு வேலை தேடி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. அ.சா.1 பொன்மலர் எனது அக்கா ஆவார். கடந்த 18.04.2015 ம் தேதி மாலை நானும் எனது அக்கா அ.சா.1 பொன்மலர் என்பவரை Hero Spender Plus இருசக்கரவாகனத்தில் திருப்பத்துாரிலிருந்து எங்கள் வீடான நாட்டார்மங்கலத்திற்கு அழைத்து சென்று கொண்டிருந்தபோது மருதுடைய அய்யனார் கோவில் ஆர்ச் முன்பாக நாங்கள் சென்றுகொண்டிருந்தபோது எங்களுக்கு பின்னால் இருசக்கரவாகனத்தில் வந்த மூன்று நபர்கள் எங்களை மிரட்டி அ.சா.1 பொன்மலர் கழுத்தில் அணிந்திருந்த இரண்டு செயின்களை கழற்றி தர சொன்னார்கள்.

2. நான் அவர்களுக்கு பயந்து என் அக்கா அ.சா.1 பொன்மலரை செயின்களை கழற்றி கொடுக்க சொன்னேன். அதன்பிறகு மேற்படி சம்பவம் தொடர்பாக என் அக்கா அ.சா.1 பொன்மலர் திருப்பத்தூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை :**

1. போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது கடந்த 18.04.2015 ம் தேதி பகல் 3.00 மணியளவில் நானும் எனது அக்கா அ.சா.1 பொன்மலரை அழைத்து கொண்டு சம்பவயிடம் அருகே சென்றுகொண்டிருந்த போது ஆஜர் எதிரிகள் உள்ளிட்ட மூன்று நபர்கள் எங்கள் வாகனத்திற்கு பின்னால் கருப்பு நிற அப்பாச்சி இருசக்கரவாகனத்தில் வந்தவர்கள் எங்களை கத்தியை காட்டி மிரட்டி எனது அக்கா அ.சா.1 பொன்மலர் கழுத்தில் அணிந்திருந்த சுமார் 7 பவுன் , 2 பவுன் எடை கொண்ட தங்கசெயின்களை அறுத்து கொள்ளையடித்து விட்டு மேற்கு நோக்கி வேகமாக சென்றுவிட்டார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் எதிரிகளை தெரியாது என்றும் போலிசார் விசாரணை செய்யவில்லை என்றும் போலிசார் விசாரணையில் சொன்ன சங்கதிகளுக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1மற்றும் 3 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவத்தை பற்றி முதலில் காவல்நிலையம் சென்று தகவல் சொன்னது யார் என்றால் நானும் எனது அக்கா அ.சா.1 பொன்மலரும் தான் சென்றோம். மேற்படி காவல்நிலையம் சென்றபோதே என்ன நடந்தது என்ற விபரத்தை சொல்லிவிட்டோம் என்றால் சரிதான். நாங்கள் சொன்ன விபரங்களை போலிசார் குறித்து கொண்டனரா என்றால் ஆமாம். அ.த.சா.ஆ.1 புகாரை நானோ அ.சா.1 பொன்மலரோ எழுதவில்லை என்றால் சரிதான், எங்கள் ஊர் ஊராட்சி மன்ற

தலைவர் பாண்டியன் எழுதினார். நாங்கள் காவல்நிலையம் செல்லும் போது ஊராட்சி மன்ற தலைவர் பாண்டியன் வந்தாரா என்றால் சுமார் 1 மணி நேரம் கழித்து வந்தார். நாங்கள் காவல்நிலையம் சென்றபோது நேரம் என்ன இருக்கும் என்றால் மாலை சுமார் 5.00 மணி இருக்கும்.

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.04.07 17:22:23 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**